**மினுவன்கொட நகர சபை**

**கம்பஹா மாவட்டம்**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 04 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூன் 01 இல் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து மினுவன்கொட நகர சபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் பெறப்பட்டன.

**(அ)** 2007 ஆம் ஆண்டில் ரூபா 500,000 பெறுமதியான உழவு இயந்திரம் சபைக்கு கிடைத்துள்ளது சபையினால் உரிமை மாற்றம் செய்யாமை காரணமாக அப்பெறுமதியானது சொத்துக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** மீளாய்வாண்டின் கணக்கின் பிரகாரம் கையிருப்பானது கையிருப்புப் பதிவேட்டை விட ரூபா 929,711 ஆல் மேலதிகமாக காட்டப்பட்டுள்ளது.

**(இ)** மீளாய்வாண்டில் ஒப்பந்தம் செய்யப்படாது 03 திட்டங்களிற்கான ரூபா 928,719 ஆனது 2015 டிசெம்பர் 31 வரை பாவிக்கப்படாமல் காணப்பட்டுள்ளது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

**(அ) கணக்காய்விற்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.**

கூட்டுமொத்தத் தொகையான ரூபா 1,201,418 ற்கான 05 கணக்குகளின் பேரேடுகளும் உப பேரேடுகளும் சமர்ப்பிக்கப்படாமையால் முறையான கணக்காய்வு செய்ய முடியாதுள்ளது.

**(ஆ) சமர்ப்பிக்கப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்.**

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் படி 2015 டிசெம்பர் 31 இல் சில்லறைக் கடனாளிகள் கணக்கு மீதி ரூபா 6,902,137 எனக் காட்டப்பட்டுள்ள போதிலும் உப பேரேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 6,622,946 எனக் காட்டப்பட்டுள்ளதனால் ரூபா 279,191 வித்தியாசம் காட்டப்பட்டுள்ளது.

**(இ) பெறவேண்டிய கணக்குகள்.**

1994 இல் இருந்து மறுக்கப்பட்ட காசோலை ரூபா. 30,590 ஐ மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய ஆதனவரி ரூபா 7,833,832 அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 12,550 கடை வாடகை ரூபா 664,235 மற்றும் இறைச்சிக்கடை குத்தகை ரூபா 363,333 சேகரிப்பதற்கு நகரசபை சட்டம் (255 அத்தியாயம்) 170 அ (2) இன் பிரகாரம் 2016 ஏப்ரல் 12 வரை நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) 2002 செப்ரெம்பர் 30 இல் அரசாங்க நிதிச்சுற்றறிக்கையின் இலக்கம் 364(3) இன் 5 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 25,000 இற்கு மேல் பெறுமதிசேர் வரி அறவீடு செய்யும் போது கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு பிரதியிட்டு இறைவரித்திணைக்கள ஆணையாளருக்கு அனுப்புதல் வேண்டும் ஆனாலும் 2015 ஜனவரியில் இருந்து டிசெம்பர் வரை ரூபா 290,567 அறவீடு செய்யப்பட்ட போதிலும் இறைவரித் திணைக்கள ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 17,834,428 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும்போது நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 361,500 ஆக விளைந்திருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மை வருமானம் மற்றும் கிடைக்கவேண்டிய வருமானம்

மீளாய்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் கிடைக்கவேண்டிய வருமானம் என்பவற்றின் விபரம் பின்வருமாறு.

| | வருமான விடயம் | பாதீடு (ரூபா) '000 | உண்மை (ரூபா) '000 | டிசெம்பர் 31 மொத்த நிலுவை (ரூபா) '000 |
|---|---|---|---|---|
| (i) | வீதவரி | 9,710 | 9,884 | 10,206 |
| (ii) | வாடகைகள் | 17,978 | 18,281 | 1,215 |
| (iii) | உரிமங்கள் | 1,237 | 1,094 | 47 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 11,756 | 37,886 | 1,627 |

### 2.2.2 ஆதனவரி

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடம் கிடைக்க வேண்டிய ஆதனவரி ரூபா 6.5 இலட்சத்தால் அதிகரித்துள்ளது.

### 2.2.3 ஏனைய வருமானம்

(அ) மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய ஏனைய வருமானம் ரூபா 4.7 மில்லியன் திரண்ட நிதியில் பதிவழிப்புச் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட ஏனைய வருமானங்களைவிட ரூபா 26 மில்லியன் அதிகமாக உள்ளது

### 2.2.4 கடை வாடகை

நகர சபைக்கு சொந்தமான பிறீடம் பார்க் கட்டிடத்தில் உள்ள 02 கடைகளிற்கு ஆரம்பக் கொடுப்பனவு ரூபா 880,304 செலுத்தாமையின் காரணமாக குறித்த ஆரம்பக் கொடுப்பனவு சபைக்கு கிடைக்கவில்லை. அந்தக்கடை மீள் கேள்வி கோரப்பட்டு வழங்கவேண்டியிருந்த போதிலும் 2016 ஏப்ரல் 18 ஆம் திகதி வரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 மேலதிக கட்டணம்

நகர கட்டளைச்சட்டம் (255 ஆம் அதிகாரம்) 182(1) ஆம் பிரிவின் சட்டப்படி பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக என்னால் அறவிட்ட மேலதிகக் கட்டணம் 2015 டிசெம்பர் 31 இற்காக ரூபா 19,946 அறவிட வேண்டியிருந்தது.

### 2.2.6 அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்

சபைக்கு கிடைக்க வேண்டிய ஏனைய வருமான முற்பணம் ரூபா 8,460,725 உம் சபையின் தொழிற்சாலை கட்டிட வைப்பும் ரூபா 1,323,004 உம் அரச இறந்து போன ஊழியர் முற்பணசபைக்கு கணக்கு மீதி ரூபா 23,402 உம் உள்ளூராட்சி ஆணையாளருடைய அனுமதியின்றி குறித்த தொகைகள் வெவ்வேறாக அடையாளப்படுத்தமால் திரண்டநிதியில் பதிவழிப்புச் செய்யப்பட்டுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------

### 3.1 செயலாற்றல் / முகாமைத்துவ செயற்திறனின்மை

---------------------------------------------------------

நிலையான சொத்துப் பதிவேட்டின் படி புலுகஹகும்புர நீர்கொழும்பு வீதியில் இலக்கம் 19 இல் உள்ள இடத்தில் 1 றூட் 6.25 பேர்ச்கள் மொத்தமாக உள்ள காணியில் ஒரு பக்கம் நீர் இறைக்கும் அறைக்காக பாவிக்கப்பட்ட போதிலும் மற்றக் காணியில் நீண்ட காலமாக அனுமதியின்றி பெண் ஒருவர் குடியிருந்துள்ளார். 1979 இல் 07 ஆம் இலக்கத்தின் பிரகாரம் அரச காணிகளை மீள எடுப்பதற்கான சட்டத்தின் படி அதிகாரமற்ற ஆட்களிடம் இருந்து காணியைப் பெற கணக்காய்வுத் திகதியான 2016 மார்ச் 29 வரை சபையினால் எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

### 3.2 திண்மக்கழிவு முகாமைத்துவம்

--------------------------------------

#### (அ) மாகாண சபை சட்டங்களிற்கு எதிராக செயற்படுதல்.

-----------------------------------------------------------------

2008 யூலை 30 ஆம் திகதிய இலக்கம் 1560/6 சுற்று நிருபத்தில் “2008 இலக்கம் 1 திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கான சட்டங்கள்” எல்லா உள்ளூராட்சி சபைகளிலும் தொடங்க வேண்டும் என்றும் 2010 டிசெம்பர் 21 இல் உள்ளூராட்சி ஆணையாளர் (மேல் மாகாணம்) இலக்கம் LGD/05/08/பொது/தொகுதி கடிதத்தின் பிரகாரம் அறிவிக்கப்பட்ட போதிலும் நகரசபை தொடங்கும் போது 18(1),19,20,21(1),22,54 மற்றும் 59 இல் உள்ள சட்டங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை

#### (ஆ) கட்டணங்கள் அறவிடாமை.

----------------------------------

மீளாய்வாண்டில் குப்பை வரி செலுத்தும் இடம் அடையாளப்படுத்துவதற்கு சபை எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அத்துடன் நகரசபையின் எல்லையில் வியாபார வரி எடுக்கின்ற ஒரு களஞ்சிய அறையும், தேங்கல் எண்ணை எடுக்கின்ற தொழிற்சாலை, 2 சூப்பர் மார்க்கட்டும் மற்றும் அநேக சாப்பாட்டுக் கொட்டல் இருந்த போதிலும் அதில் குப்பை வரி ஒன்று எடுப்பதற்கு நகரசபை வர்த்த மானியில் பிரசுரிக்க ஏற்பாடு செய்யவில்லை.

### 3.3 பொது சுகாதார அசௌகரியங்களைத் தடுத்தல்

-----------------------------------------------------------

2012 யூன் 27 ஆம் திகதிய 1764/14 இலக்க வர்த்தமானி அறிவித்தலின் படி 2012 இலக்கம் 03 ஆம் பொது சுகாதார அசௌகரியங்களைத் தடுத்தல் சட்டத்தின் படி கிழக்கு மாகாண மக்களின் சுகாதார முன்னேற்றத்துக்காகவும் பாதுகாப்பிற்காகவும் நுளம்பினால் பாதிக்கப்படும் அல்லது நோய் வருவதை தடுத்தலிற்கும் மற்ற மக்களிற்கு வரும் பொது சுகாதார அசௌகரியத்தைத் தடுப்பதற்கான தொடர்புடைய அல்லது உப பிரிவில் உள்ள காரணத்திற்கான சட்டங்களை அமுல்படுத்த வேண்டியிருந்த போதிலும் நகரசபை தொடங்கும் போது சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------

### பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------

மீளாய்வாண்டின் 53 தலைப்புக்களில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு கூட்டுமொத்தத் தொகை ரூபா 104,600 செலவு செய்யப்படாமல் மீதியாகக் காட்டப்பட்டுள்ளது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் சபைத் தலைவருக்குப் பல தடவைகள் அறிவிக்கப்பட்ட போதிலும் பின்வரும் முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வருமானக் கட்டுப்பாடு
(ஆ) கிடைக்க வேண்டிய மற்றும் பெறவேண்டிய கணக்குகள்
(இ) இருப்புக் கட்டுப்பாடு